# வஞ்சனையிலிருந்து விடுதலை பெறுவதற்கான ஜெபம்

தேவனே நீர் சத்தியத்தின் தேவனாக இருப்பதற்காக நன்றி; இருளின் அந்தகாரத்தில் உம்முடைய வெளிச்சத்தைப் பிரகா சிக்கச் செய்கிறீர். நான் அந்தகாரத்தில் வாழாமல், உம்முடைய வெளிச்சத்தில் வாழ இன்று தீர்மானிக்கிறேன்.

நான் பேசின சகல பொய்களுக்காக என்னை மன்னித்தரு ளும். பெரும்பாலும் நான் சௌகரியமான, எளிதான வழி களையே தெரிந்துகொண்டேன்; சரியான வழியைத் தெரிந்து கொள்ளவில்லை. நான் பேசின சகல அவபக்தியான வார்த் தைகளுக்காக என் வாயைச் சுத்திகரியும். சத்தியத்தைக் கேட்பதில் களிகூருகிற இருதயத்தையும், மற்றவர்களுக்குச் சத்தியத்தை அறிவிக்கிற உதடுகளையும் எனக்குத் தாரும்.

சத்தியத்தில் ஆறுதலைக் காண்பதற்கும், பொய்களைப் புறக் கணிப்பதற்கும் தைரியத்தைத் தாரும்.

என் அனுதின வாழ்வில் பொய்களைப் பயன்படுத்துவதைப் புறக்கணித்து, நிராகரிக்கிறேன்.

பொய்பேசுவதை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுகிற **தகியா** உட்பட இஸ்லாத்தின் அனைத்து போதனைகளையும் புறக் கணிக்கிறேன். சகல பொய்கள் மற்றும் வஞ்சனைகளி லிருந்து விலகத் தீர்மானிக்கிறேன். சத்தியத்தில் வாழத் தீர்மா னிக்கிறேன்.

இயேசு கிறிஸ்துவே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார் என்று அறிவிக்கிறேன்.

அவருடைய சத்தியத்தின் பாதுகாப்பின்கீழ் வாழத் தீர்மானிக் கிறேன்.

என்னுடைய பாதுகாப்பு உம்மில் இருக்கிறது; சத்தியம் என்னை விடுதலையாக்கும் என்று அறிவிக்கிறேன்.

பரலோகப் பிதாவே, உம் சத்தியத்தின் வெளிச்சத்தில் நடக்க வேண்டிய வழியைக் காட்டியருளும். உம் சத்தியத்தின்படி பேசவேண்டிய வார்த்தைகளையும், நடக்கவேண்டிய வழியை யும் அருளியருளும்.